### பையனூரில் சினிமா தொழிலாளர்களுக்கு வீடுகள் – திருப்பெரும்புதூரில் உலக அளவில் சினிமா மையம் கொடுத்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - திரையுலகம் சார்பில் நெஞ்சார்ந்த நன்றி!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் முதல்வர் பிறந்த நாள் விழாவில் நடிகர் நாசர் பேச்சு!

சென்னை, ஏப். 13 -

**சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் நடைபெற்ற முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவில் பேசிய நடிகர் நாசர், மையனூரில் சினிமா தொழிலாளர்களுக்கு வீடுகள் - திருப் பெரும்புதூரில் உலக அளவில் சினிமா மையம் ஏற்படுத்திக் கொடுத்த முதல்வருக்கு நன்றி என்று தெரிவித்தார்.**

சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னேடுப்பில் நடைபெற்ற கழகத் தலைவர் - முதல்வர் 72வது பிறந்த நாள் விழாவில் நடிகர் நாசர் பேசியதாவது:-

அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கங்கள். மிகச்சிறந்த இந்த விழாவில் இம்முறையும் கலந்து கொள்வதில் எனக்கு பெருமகிழ்ச்சி.

ஒரு கட்சிக்கான முதல்வராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை நான் பார்க்கவில்லை. அவரே தான் பதவியேற்றவுடன், "நான், எதிரிகளுக்கும் - என்னை எதிர்த்தவர்களுக்கும் முதல்வன்; உடன் நின்றவர்களுக்கும் முதல்வன்; ஆதரவு அளிக்காதவர்களுக்கும் நான் முதல்வன்" என்ற தோரணையை அவர் கொடுத்தார்.

எப்போதுமே ஒரு கட்சி ஆட்சிக்கு வரும் போது, அதற்கு முன் ஆட்சி செய்த கட்சியின் அனைத்து இடங்களையும் துடைத்தெறிந்து விட்டு, தன்னுடைய தனக்கு ஆதரவான பெயர்களை வைத்துக் கொள்வது வழக்கமாக இருந்தது. ஆனால் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், அம்மா உணவகங்களை மாற்றாமல் அப்படியே விட்டு வைத்தார். அதுதான், அவர் எதிரிகளுக்குத் தருகின்ற மரியாதை;

ஏனென்றால், அவருடைய தந்தை அந்தப் பாரம்பரியத்தில் இருந்து வருகிறார். 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மனம் உண்டு' என்கின்ற அறிஞர் அண்ணாவின் வழி வளர்ந்தவர். இன்றைக்கு கட்சிப் பணிகளில் அவர் கட்சித் தலைவராக இருக்கலாம் ஆனால், முதல்வராக அவர் எல்லோருக்கும் பொதுவான ஒரு முதல்வராக இருக்கிறார் என்ற காரணத்தினால், நான் இங்கு வந்து நிற்கின்றேன்.

### நிறைவு செய்ய வேண்டிய கனவுகள்!

அவருக்கு 72 வயது நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் பல்லாண்டுகள் அவர் வாழ வேண்டும். நாம் அவரை வாழ வைப்போம். அவர் செய்ய வேண்டிய கடமைகள் பல இருக்கிறது; நிறைவு செய்ய வேண்டிய கனவுகள் நிறைய இருக்கிறது. அதற்கு நாமெல்லாம் ஆதரவாக இருக்கிறோம். அவர் நினைக்கின்ற திட்டங்கள் - கனவுகள் எல்லாம் நிறைவேறும்.

இந்த விழா 'மனிதநேய விழா' என்று தலைப்பிடப்பட்டிருக்கிறது. தலைவரைப் போல் மனித நேயம் மிக்கவர்கள் யாரும் இல்லை என்றுதான் நான் சொல்வேன். அவருடைய பல வீடியோக்களை நான் பார்க்கிறேன். எனக்கு மிகவும் பிடித்தது, அவர் அதிகாலை பொதுவாக எந்த ஒரு பாதுகாப்பும் இன்றி மக்களோடு மக்களாக வாக்கிங் செல்லும் காட்சி. மக்களோடு நெருக்கமாக இருக்கின்ற அவருக்கு மனிதநேய விழா எடுப்பதில் மிக ஒரு அர்த்தம் உள்ளதாக இருக்கிறது.

### துறைதோறும் முன்னேற்றம்!

அதற்குப் பிறகு என்னை ஈர்த்தது, துறைதோறும் முன்னேற்றம். இந்தக் கட்டமைப்பில் எத்தனை துறை இருக்கிறதோ, அத்தனை துறைகளும் முன்னேற்றம் காண வேண்டும். ஒரு பகுதியில் முன்னேற்றம் கண்டுவிட்டு, இன்னொரு பகுதியில் கோட்டை விட்டால் அது முழுமையானதாக முன்னேற்றமாக இருக்காது. ஒவ்வொரு துறையும் முன்னேற வேண்டும் என்கிற தலைப்பை வைத்திருக்கிறார்கள்.

எனக்குப் பெருமை, முத்துவேல் கருணாநிதி ஐயா அவர்கள் கலைஞர் ஐயாவும் எங்களுடைய துறை; முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் எங்களுடைய துறை; நான் அன்பாக தம்பி என்று அழைக்கும் மரியாதைக்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்களும் எங்களுடைய துறைதான். எனவே, அந்தத் துறையின் சார்பாக நான் அவர்களுக்கு வாழ்த்து கூறுவதை விட, நன்றி சொல்ல நான் வந்திருக்கிறேன்.

நன்றி என்பது, வாழ்த்துகளை விட மிக மேன்மையான ஒன்றாக நான் கருதுகிறேன். ஏனென்றால், இக்கட்டான சூழ்நிலையில் கை நீட்டி கொடுக்கின்ற ஒரு உதவிக்கு, மனதில் இருந்து வருவதுதான் நன்றி.

கலைஞர் அவர்கள் இருக்கிறபோது, இந்தத் துறையை முன்னேற்றத்திற்காக பல திட்டங்களை வகுத்தார்; பல உதவிகளைச் செய்தார்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய காலகட்டத்தில், என் கண் முன்னால் நடந்த சில திட்டங்களை அவர் கொடுத்ததற்காக அவருக்கு நன்றி கூற நான் இங்கே உங்கள் முன் நிற்கிறேன்.



சினிமாவில், பகட்டாக பல கோடிகள் வாங்குகின்ற நட்சத்திரங்கள் சில பேர் இருந்தாலும், ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் வாங்குகின்ற 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அவர்களுக்கும் மாதாந்திர வருமானம் அல்ல. ஒரு மாதத்தில் சராசரியாக ஒரு தொழிலாளிக்கு பத்து நாட்களுக்கு மேல் வேலை கிடைத்தாலே மிக அதிர்ஷ்டம். அந்தச் சூழ்நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்பாக, கலைஞர் அவர்கள், தான் வந்த துறையில் பாடுபடும் தொழிலாளிகள் வசதியாக இருக்க வேண்டும் என்பதற்காக, எங்களுக்கு - இந்த சினிமா துறைக்கு 90 ஏக்கர் 99 வருடங்களுக்கு லீசுக்காக எங்களுக்கு கொடுத்தார். அதற்கு நாம் அன்று நன்றி சொல்லிவிட்டோம்.

இன்று அதைவிட பெரிய நன்றியாக இன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாங்கள் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால், அன்று கலைஞர் அவர்கள் கொடுத்து விட்டார்கள். அந்த வீட்டு வசதி வாரிய ஒப்பந்தத்தின் படி, 'அங்கு கொடுக்கப்பட்ட இடத்தில் மூன்று வருடத்திற்குள் நீங்கள் வீடுகள் கட்டியாக வேண்டும்'. இதோ பத்து வருடங்கள் ஆகிவிட்டது. யாரும் அங்கே வீடு கட்ட முடியவில்லை. எனவே, அந்த பொன்னான திட்டம் காலாவதி ஆகிவிட்டது. அரசு பிடுங்கிவிட்டது என்று சொல்லக்கூடாது. அரசு உனக்கு கொடுத்தது. கலைஞர் உங்களுக்கு 99 வருடங்கள் நீங்கள் சுகமாக வாழுங்கள் என்று கொடுத்தார். அதனுடைய சட்ட திட்டம், மூன்று வருடங்களில் நீங்கள் வீடு கட்ட வேண்டும் என்று சொல்கிறது. நாங்கள் கட்டவில்லை. தானாக காலாவதியாகிறது. அது அரசுக்குத்தான் சென்று சேர வேண்டும்.

### மீட்டுக் கொடுத்த - தொழிலாளிகளின் நிலம்!

ஆனால் முதல்வர் அவர்கள், இந்தத் திட்டத்தை சொந்தமாக ஆராய்ந்து இதனுடைய கஷ்ட நஷ்டங்களை தெரிந்து, அவர்கள் பல பேர் வீடு கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர், தன்னுடைய அதிகாரிகளுக்கு சொல்கிறார், 'அதை தவிர்த்து விடுங்கள். அந்த சட்டத்தை மீட்டு, மீண்டும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுப்போம்' என்று, அந்த 25 ஆயிரம் தொழிலாளிகளுக்காக இன்று அந்த நிலத்தை எங்களுக்கு மீட்டுக் கொடுத்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நான் எப்படி நன்றி சொல்லாமல் இருக்க முடியும்!

முத்துராமன் ஐயா அவர்களுக்கு தெரியும். தமிழ் சினிமாவின் வயது என்னவோ, அதே வயதுதான் அவர்களுக்கும். இன்னும் பல ஆண்டு காலம் இருப்பார். இன்று, மிக அழகாக இருந்தது. 'ஐயா நீங்கள் அங்கேயே உட்கார்ந்து பேசுங்கள்' என்று சொல்லும்போது, 'இல்லை, இல்லை…' என்று இங்கே வந்து நின்று, என்ன அழகாக பேசினார். அந்தத் தைரியம், இந்தக் காலத்து எங்கள் தலைமுறைக்கு இருக்குமா என்று தெரியாது. உட்கார்ந்து பேசுங்கள் என்றால், சரி… உட்கார்ந்து வசதியாக பேசி விடுவோம் என்ற எண்ணம்தான் இருக்கும்.

எனவே, அவர் முன்பு சினிமாவைப் பற்றி நான் சொன்னால் எதுவும் மிகைப்படுத்தப் பட்டதாக இருக்காது. ஏனென்றால், உண்மை அவருக்குத் தெரியும்.

50, 60 ஆண்டுகளுக்கு முன்பாக, ஹாலிவுட்டுக்கு அடுத்தபடியாக உலகிலேயே மிகச் சிறந்த சினிமா உருவாகும் ஒரு மையமாக சென்னை இருந்தது. வேறு எங்கும் இல்லை. ஐரோப்பாவில் இல்லை; கல்கத்தாவில் இல்லை; பாம்பேயில் இல்லை; சென்னை மாநகரத்தில்தான் அவ்வளவு ஸ்டூடியோக்கள் இருந்தன. ஜெமினி ஸ்டூடியோ, விஜயா வாகினி, பரணி, கற்பகம், எத்தனையோ… 50, 60 ஆண்டுகளுக்கு முன்பாக, நீங்கள் இந்தி படம் எடுக்க வேண்டும் என்றால், சென்னைதான் வந்தாக வேண்டும்; தெலுங்கு படம் எடுக்க வேண்டும் என்றால். இங்குதான் வந்தாக வேண்டும்; மலையாளப் படம் எடுக்க வேண்டும் என்றால், இங்குதான் வந்தாக வேண்டும்; கர்நாடக படம் எடுக்க வேண்டும் என்றால், இங்குதான் வந்தாக வேண்டும். ஆனால், காலத்தின் மாற்றத்தில் தொழில்துறையின் வளர்ச்சியால், அந்தந்த மொழி படங்கள் அந்தந்த மாநிலங்களுக்கு சென்று விட்டபோது, சிறிதாக இந்தத் துறை சுருங்குகிறது.

இன்று மனம் கலங்குகிறது. என்னுடைய சிறுவயதில், என் அப்பா செங்கல்பட்டில் இருந்து அழைத்து வந்து, ஒவ்வொரு ஸ்டூடியோவாக காண்பிப்பார். ஒவ்வொரு ஸ்டூடியோவிற்கும் ஒரு அடையாளம் இருக்கும். விஜயா வாகினி என்றால், இரண்டு காளை மாடு முட்டிக்கொண்டு நிற்பது போன்று இருக்கும். ஏ.வி.எம்.ற்கு பெரிதாக உலக உருண்டை இருக்கும். இன்றைக்கு எல்லாமே போய்விட்டது. அனைத்தும் மருத்துவமனை ஆகிவிட்டது; ஃபிளாட் ஆகிவிட்டது; மால் ஆகிவிட்டது.

உண்மையில், வெட்கமாக இருக்கிறது. பயமும் - கவலையும் இருக்கிறது. ஐயாவிற்கு தெரியும். இன்றைக்கு சினிமா எடுப்பதற்கு என்று முறையான ஸ்டூடியோக்கள் அவ்வளவாக இல்லை. பெரிய பெரிய இடங்கள் இருக்கின்றன. ஏனென்றால், அன்றைய சினிமா அரங்கிற்குள் எடுக்கப்பட்டது. இன்றைய சினிமா, எந்த இடம் வேண்டுமோ, அந்த இடத்திற்கு சென்று எடுத்து விடலாம். சந்திர மண்டலத்திற்கு கூட சென்று எடுத்து விடலாம். இப்போது ட்ரோன் என்று வந்திருக்கிறது. அது பறந்து பறந்து போட்டோ எடுக்கிறது. அது இந்த அரங்கத்திற்குள்ளேயே வந்தாகிவிட்டது.

எனவே, இந்தக் காலகட்டத்தில் நாங்கள் பொதுவாக ஒரு கோரிக்கையை முதல்வரிடம் வைக்கிறோம். ஐயா, இவ்வளவு பாரம்பரியமிக்க இந்த சென்னை மாநகரத்திற்கு, பல கலைஞர்களை பல எழுத்தாளர்களை - பல நட்சத்திரங்களை உருவாக்கிய வரலாறு இருக்கிறது. அப்படிப்பட்ட இந்தச் சென்னையில், சரியான ஸ்டூடியோக்கள் இல்லை; படம்பிடிப்பதற்கான அரங்குகள் இல்லை என்று ஒரே ஒரு கோரிக்கைதான் ஒரு முறைதான்.

### உலக சினிமாவிற்கு ஒரு மையம்!

பொதுவாக ஒரு விஷயம் உண்டு. அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தால், அதை திருப்பித் திருப்பிச் சென்று பார்க்க வேண்டும். ஏனென்றால், ஒரு அரசுக்கு மெத்தனம் கிடையாது. பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதில், எது பொதுவான பிரச்சினை? எது மக்களுக்கான பிரச்சினை? எது தனிநபர் பிரச்சினை? எது மக்களை முன்னேற்றிச் செல்லும்? எது குழந்தைகளுக்கு? என்று இதெல்லாம் பார்த்துவிட்டுதான், இந்தப் பிரச்சினையை எடுப்போம் என்று எடுப்பார்கள்.

ஆனால், எங்கள் துறையைச் சார்ந்த எங்கள் முதல்வர் அந்த விண்ணப்பத்தை பார்த்தவுடன், அவர் சார்ந்த துறை என்பதற்காக அல்ல; இன்று உலகத்திலேயே இன்னும் நூறாண்டு கள் செல்லலாம். அதாவது படத்தின் மூலமாக கதை சொல்லப்படும் விஷயம்தான், முன் நின்று நிற்கும் என்பதற்காக, இன்று திருப்பெரும்புதூரில் 140 ஏக்கர்கள் கொடுத்து, அந்த இடத்தை கொடுத்தது மட்டும் அல்ல; அந்த கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். அவர் சொல்லுகிறார், "இந்த இடத்தில் கட்டப்படும் இந்த ஸ்டூடியோ தமிழ் படத்திற்காக அல்ல; உலகத்தில் உள்ள தொழில்நுட்பம் எல்லாம் இங்கு வர வேண்டும். ஆங்கில படங்களை விட சிறந்ததாக - ஐரோப்பா படங்களை விட சிறந்ததாக - தொழில்நுட்பம் சென்னையில் இருக்க வேண்டும். அப்படி நீங்கள் நடத்துங்கள். நான் இடம் கொடுப்பது மட்டுமல்ல, அந்த உலக சினிமாவிற்கான ஒரு மையத்தை நீங்கள் சென்னைக்கு கொண்டு வாருங்கள்" என்று எங்களிடம் கூறுகிறார். நான் எப்படி நன்றி சொல்லாமல் இருக்க முடியும். என்னுடைய துறையை அவர் எதிர்காலத்திற்காக வகுக்கிறார். தற்போது இருக்கும் பிரச்சினைக்காக அவர் ஆற்றவில்லை. எதிர்காலத்திற்காக - தான் மறைந்த பின்னும், தான் சார்ந்த துறை இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு உலகத்திற்கு இணையான ஒரு சினிமா மையத்தை கொண்டு வருகிறார் என்றால், நான் அவருக்கு நன்றி சொல்லித்தான் ஆக வேண்டும்.

எனவே, இந்தப் பையனூரில் தொழிலாளிகளுக்காக கொடுத்த அந்த வீடுகளுக்கான திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து சேர்த்ததற்கும், இந்த சினிமா முன்னேற - சினிமா உலகப் போட்டிக்கு இணையாக வளர்வதற்காக ஒரு மையத்தை உருவாக்கிக் கொடுத்த எங்கள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்தத் துறையின் சார்பாக - பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் சார்பாக, அவருக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் வேண்டும். இன்று அவருக்கு பல நெருக்கடிகள் இருக்கிறது. நான் அரசியல் பேசவில்லை. நான் எந்த அரசியல் கட்சியும் சேர்ந்தவன் அல்ல. தள்ளி நின்று பார்ப்பவன். ஏனென்றால், என்னுடைய ஐந்து வருட கால வாழ்க்கையை தீர்மானிக்கின்ற ஒரு விஷயத்தை, நான் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இன்று தமிழ்நாட்டிற்கு பெரும் இடுக்கண்கள் வருகின்றன; திட்டமிடப்பட்டி ருக்கின்றன. இவ்வளவு பிரச்சினை களுக்குப் பிறகும், ஐயா விஸ்வநாதன் அவர்கள் சொல்லியதைப் போல, இன்றைக்கும் தமிழ்நாடு மிக மிக அதிகமாக வரியைச் செலுத்துகின்ற ஒரு மாநிலமாகிறது. நம்முடைய உழைப்பில் நாம் செலுத்துகின்ற வரியில் நமக்கு முதலிடம் வராமல், அது தடுத்து வைக்கப்பட்டு - நிறுத்தி வைக்கப்பட்டு வேறு இடத்திற்கு செல்கிறது.

இப்போது, 2, 3 நான்கு நாட்களுக்கு மன்பு, முதல்வர் ஒரு கூட்டம் நடத்துகிறார். ஐயா விஸ்வநாதன் அவர்களுக்குத் தெரியும். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு கூட்டம். இது ஒன்றிய அரசை எதிர்த்து போடப்பட்ட கூட்டம் அல்ல. நான் அவ்வாறுதான் நினைக்கிறேன். ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய உரிமையை தற்காத்துக் கொள்ள – அரசியல் சாசனத்தை தக்க வைத்துக் கொள்ள, மிக அழகான ஒரு கூட்டத்தை நடத்தி இருக்கிறார்; ஒரு பலத்தை கொடுத்திருக்கிறார்.

எனவே, அவருக்கு என்றென்றும் மக்களுடைய ஆசிகளும், வாழ்த்துக்களும், ஆதரவும் உண்டு என்பதில் எனக்கு பெரும் நம்பிக்கை உண்டு. எங்களுடைய ஆதரவு அவருக்கு என்றென்றும் உண்டு என்று கூறி, அவரை வாழ்த்தி, மீண்டும் எந்தன் துறையின் சார்பாக நன்றி கூறி அமைகிறேன்.

இவ்வாறு நடிகர் நாசர் பேசினார்.




கடலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தூக்கணம்பாக்கத்தில் தி.மு.க. சார்பில் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் நிதி ஒதுக்காததைக் கண்டித்தும், ஆளுநரை மாற்ற வலியுறுத்தியும், தமிழகத்திற்கு தொடர்ந்து பல்வேறு திட்டங்களுக்கு நிதி வழங்காமல் வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்திற்கு கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி பேசினார். இதில் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், ராமலிங்கம், ஞானப்பிரகாசம், ஞானம், ஜெயமூர்த்தி, முத்துக்குமார சாமி, தமிழரசி பிரகாஷ், மனோகர், காசிநாதன், நந்தன், சரவணன், சுதாகர், நிர்வாகிகள் அழகானந்தம், சிந்து நாதன், முத்துவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கூ. பால்ச்சாமி

**ஏப்ரல் 13 (2021)**



கழகம் துவங்கிய நாளிலேயே உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

காரியாபட்டி ஒன்றிய அவைத்தலைவர், ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

விருதுநகர் மாவட்ட கவுன்சிலராகவும், கூட்டுறவு நாணய சங்கத் தலைவராகவும் பொறுப்பேற்று பணியாற்றியவர்.


கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, 1976ல் மிசா சட்டத்தில் ஓராண்டு சிறைவாசமும், 1984ல் சட்ட எரிப்பு போராட்டத்தில் நான்கு மாத சிறைவாசமும் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை மிசா இரா. துரை

**ஏப்ரல் 13 (2010)**



மாணவப் பருவத்திலேயே தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் மேடைப் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு கழகப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் குடந்தை இரா.துரை அவர்கள்.

கழகம் தொடங்கப்பட்ட அன்றே உறுப்பினராக இணைந்தவர். 1962ஆம் ஆண்டில் நடைபெற்ற விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம்; அவசரநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் மட்டுமன்றி, கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

குடந்தை நகரக் கழகச் செயலாளராக 30 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றிய இவர், அதற்கு முன்னர் நகரக் கழகப் பொருளாளராகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1971ஆம் ஆண்டு முதல் குடந்தை நகரமன்ற உறுப்பினராகவும், நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**